Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.113/2025**

Preliminary Register

Deposition of **PW- 4 LW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | இளையராஜா | Father Name | : | கலியபெருமாள் |
| Village | : | ஆலங்குடி | Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 42 | Calling | : | TASMAC supervisor |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 7th day of May 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு. R. கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து TASMAC supervisor வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். தற்போது பார்வை மகசரில் காட்டப்படும் கையொப்பம் என்னுடையதல்ல. நான் எந்த வழக்கிற்காக வந்திருக்கிறேன் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

நான் B.Com வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ், ஆங்கிலம் நன்கு படிக்கத் தெரியும் என்றால் சரிதான். நான் கையொப்பம் ஆங்கிலத்தில் போடுவேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டு சாட்சிகளின் கையொப்பமும் ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான். பார்வை மகசரில் காட்டப்பட்டுள்ள எனது முகவரி சரியாக உள்ளது என்றால் சரிதான். 13.01.2024ம் இரவு 12.00 மணியளவில் எங்கிருந்தேன் என்றால் பணி முடித்து விட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் ஊத்துக்காடில் உள்ள டாஸ்மாக் கடையில் பணிபுரிந்து வருகிறேன். கிருஷ்ணமூர்த்தி மனைவி சத்தியலீலாவை தெரியுமா என்றால் தெரியும். எதிரி அருண்ராஜை தெரியும். எதிரி அருண்ராஜ் அ.சா.1ஐ கத்தியை காட்டி மிரட்டி கீழே தள்ளினார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சத்தியலீலா வீட்டிற்கு டாஸ்மாக் கடைக்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 15 கி.மீ. இருக்கும் என்றால் சரிதான். எனது Supervisor பதவி என்பது வெவ்வேறு கடைகளுக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கும் சத்தியலீலா வீட்டிற்கும் அரை கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். மதிய உணவு எனது வீட்டில் தான் சாப்பிடுவேன் என்றால் சரிதான். 13.01.2024ம் தேதி மாலை 04.00 மணியளவில் என் வீட்டிற்கு சாப்பிட வந்துவிட்டு சத்தியலீலா வீட்டு வழியாக செல்லும் போது போலீசார் அவரது வீட்டில் நடந்த சண்டை சம்பந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றாலும் அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அது தவறு.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.05.07 18:11:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.